செ.வெ.எண்:-55 நாள்: 20.03.2017

## பத்திரிக்கைச் செய்தி

### HCL மென்பொருள் நிறுவனம் கலந்து கொள்ளும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்

HCL மென்பொருள் நிறுவனம், மதுரை கலந்து கொள்ளும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் 24.03.2017 காலை 11 மணிக்கு திருநெல்வேலி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் நடைபெற உள்ளது. 2014, 2015, 2016 ஆண்டுகளில் 85% மதிப்பெண்களுடன் +2 தேர்ச்சி பெற்றவர்கள் இந்த வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொள்ளலாம். +2வில் கணிதம் அல்லது வணிகக் கணிதம் பாடத்தை ஒரு பாடமாக எடுத்து தோச்சி பெற்றிருக்க வேண்டும். Online test, Aptitude test and HR interview என மூன்று கட்டமாக தேர்வு நடைபெறும்.

இதில் தேர்வு செய்யப்படுவோருக்கு மதுரையில் ஓராண்டு கணிப்பொறி பயிற்சி அளிக்கப்படும். பயிற்சி காலத்தில் மாதம் ரூ.3500 உதவித்தொகை வழங்கப்படும். குறைந்த செலவில் தங்குவதற்கும், உணவுக்கும் ஏற்பாடு செய்து தரப்படும். பயிற்சியை முடித்தவர்களுக்கு மாதம் ரூ.15,000 (வருடம் ரூ.1,80,000) சம்பளத்தில் வேலை வழங்கப்படும். குறைந்தது 2 ஆண்டுகளாவது இந்நிறுவனத்தில் பணிபுரிய வேண்டும்.

இப்பணிக்கு தேர்வு செய்யப்படுபவர்கள் பெயர்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் ரத்துசெய்யப்படமாட்டாது. இப்பணிக்கு செல்ல விருப்பமுள்ளவர்கள் 24.03.2017 அன்று காலை 11 மணிக்கு வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு நேரில் அஜராகி நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ளலாம்.

இத்தகவலை திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கிறார்.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
திருநெல்வேலி

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருநெல்வேலி